செ.வெ.எண்: 27 நாள்:15.07.2021

**நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகூர் தர்கா, மற்றும் பேருந்து நிலையத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.**

நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகூர் பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டு வரும் பயணியர் தங்கும் கட்டிடம் ரூ. 1 கோடியே 40 லட்சம் மதிப்பீட்டில் கட்டும் பணிகளை ஆய்வு செய்தார். பிறகு நாகூர் தர்கா எதிரில் உள்ள யானை கட்டி முடுக்கில் அமைந்துள்ள கழிப்பிடம் சுகாதார நிலைமை குறித்து ஆய்வு செய்து அதை தூய்மையாக வைத்து பராமரிக்குமாறும், கழிவறை பழுதடைந்து உள்ளதால் SBM 2.0 திட்டத்தில் 50 லட்சம் மதிப்பீட்டில் புதிய கழிவறை கட்டப்படும் எனவும் பின்பு நாகூர் பின்புறமுள்ள பெரியகுளம் ரூ.4 கோடியே 34 லட்சம் மதிப்பீட்டில் சீரமைப்பு பணிகள் பொதுப்பணித்துறை சார்பில் நடைபெற்று வருகிறது. ஆய்வு செய்த பின்பு நகரின் பல பகுதிகளில் சுகாதார பணிகளை நேரில் ஆய்வு செய்து சுகாதார பணிகள் இன்னும் மேம்பட வேண்டும் என சுகாதார ஆய்வாளர்கள் நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரிடம் அறிவுறுத்தினார். மேலும் அங்கிருந்து அக்கரை குளம் பகுதியில் உள்ள நகராட்சி குளத்தை ஆய்வு செய்து, மிகவும் சிறப்பாக வடிவமைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது என நகராட்சி ஆணையரிடமும் நகராட்சி பொறியாளரிடமும் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்து பாராட்டு தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது நகராட்சி ஆணையர் திரு.பி.ஏகராஜ், நகராட்சி பொறியாளர் எஸ்.வசந்தன் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**